**சுருக்கம்**

ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித்துறை – தருமபுரி மாவட்டம் – பென்னாகரம் வட்டம் – மஞ்சநாய்க்கன அள்ளி ஊராட்சி – கடமடை கிராமத்தில் சர்வே எண். 167/3, கிணறு புறம்போக்கு – தந்தை பெரியாரின் மார்பளவு வெண்கல சிலையை நிறுவுதல் – அனுமதி வழங்குதல் – ஆணை வெளியிடப்படுகிறது.

---

ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் (ஊ.2) துறை

அரசு ஆணை (நிலை) எண்.15 நாள்: 05.02.2010

படிக்கப்பட்டவை:

1. அரசு கடித எண்.15611/சி3/94–6, ஊரக வளர்ச்சித்துறை, நாள் 12.06.1995.
2. அரசு ஆணை (நிலை) எண்.248, ஊரக வளர்ச்சித்துறை, நாள் 23.11.1998.
3. தருமபுரி மாவட்ட ஆட்சித் தலைவர் கடித எண்.4026/07/அ4, நாள் 18.01.2008.

* * * * *

ஆணை:

தருமபுரி மாவட்டம், பென்னாகரம் வட்டம், மஞ்சநாய்க்கனஅள்ளி ஊராட்சி, கடமடை கிராமத்தில் ச.எண்.167/3, கிணறு புறம்போக்கில் தந்தை பெரியாரின் மார்பளவு வெண்கலச் சிலையை அமைக்க திராவிட கழக பொதுக்குழு உறுப்பினர் திரு.அ.தீர்த்தகிரி அவர்கள் அனுமதி கோரியிருந்தார்.

2. மேற்படி புலத்தில் தந்தை பெரியாரின் மார்பளவு வெண்கல சிலையை அமைப்பது தொடர்பாக, கடமடை கிராமம் புல எண். 167/3–ல் பல்நோக்கு கட்டிடம் கிராம நிர்வாக அலுவலர் கட்டிடம், பஞ்சாயத்து கிணறு ஆகியவை உள்ளது என்றும், இந்த புலத்தில் கிராம நிர்வாக அலுவலகம் முன்பு பென்னாகரம் பெரும்பாலை ரோட்டிற்கு அருகில் 10x 10 உள்ள நிலத்தில் பெரியார் சிலை அமைக்க ஒதுக்கீடு செய்யலாம் என வட்டாட்சியர் தெரிவித்துள்ளார் என்றும், வட்டாட்சியரின் அறிக்கையை ஏற்று பெரியார் சிலை அமைக்க நிலம் ஒதுக்கீடு செய்யலாம் என்று தருமபுரி வருவாய் கோட்ட அலுவலரும், போக்குவரத்திற்கோ அல்லது பொதுமக்களின் அன்றாட வாழ்க்கைக்கோ எவ்வித இடையூறும் இல்லையென தெரிவித்து மேற்படி இடத்தில் பெரியார் சிலை அமைக்க காவல்துறையில் ஆட்சேபனை ஏதுமில்லை என்று தருமபுரி காவல் கண்காணிப்பாளரும், மேற்படி புலம் கிணற்று புறம்போக்கு பகுதி என்றும், பிற்காலத்தில் சாலையை அகலப்படுத்தும்போது இச்சிலை அமைப்பதால் எந்தவித

(த.பி.பா.)

பாதிப்பும் இல்லை என்றும், இச்சிலை அமைக்கப்படவுள்ள பகுதியில் நெடுஞ்சாலை பகுதியினை எதிர்காலத்தில் வேறு ஆக்கிரமிப்புகள் ஏதும் செய்யக்கூடாது என்ற நிபந்தனை அடிப்படையில் மேற்படி சிலை அமைக்க அனுமதி வழங்கலாம் என்று தருமபுரி நெடுஞ்சாலை கோட்டப் பொறியாளரும் பரிந்துரை செய்துள்ளனர்.

3. மேற்படி புலத்தில் தந்தை பெரியாரின் மார்பளவு வெண்கல சிலையை அமைப்பதற்கு ஆட்சேபனை இல்லை என்று மஞ்சநாய்க்கன அள்ளி ஊராட்சி தனது 11.06.2008 அன்று நடைபெற்ற கூட்டத்தில் தீர்மானம் நிறைவேற்றியுள்ளது. ஆகவே, தருமபுரி மாவட்டம், பென்னாகரம் வட்டம், மஞ்சநாய்க்கனஅள்ளி ஊராட்சி, கடமடை கிராமத்தில் ச.எண்.167/3, கிணறு புறம்போக்கில் தந்தை பெரியாரின் மார்பளவு வெண்கலச் சிலையை அமைக்க அரசின் அனுமதி வழங்க தருமபுரி மாவட்ட ஆட்சித் தலைவர் மற்றும் ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி ஆணையர் பரிந்துரை செய்துள்ளனர்.

4. தருமபுரி மாவட்ட ஆட்சித் தலைவரின் கருத்துருவை, மேலே ஒன்று மற்றும் இரண்டில் படிக்கப்பட்ட அரசுக் கடிதம் மற்றும் அரசு ஆணையின்படி அரசு நன்கு ஆய்வு செய்து, மாவட்ட ஆட்சித்தலைவரின் பரிந்துரையினை ஏற்று தருமபுரி மாவட்டம், பென்னாகரம் வட்டம், மஞ்சநாய்க்கனஅள்ளி ஊராட்சி, கடமடை கிராமத்தில் ச.எண்.167/3, கிணறு புறம்போக்கில் தந்தை பெரியாரின் மார்பளவு வெண்கலச் சிலையை அமைக்க கீழ்க்கண்ட நிபந்தனைகளுடன் அனுமதி அளித்து அரசு ஆணையிடுகிறது.

1. தந்தை பெரியாரின் சிலையை வெண்கலத்தில் மட்டுமே செய்து உயர்ந்த பீடம் அமைத்து வைக்க வேண்டும்.

2. சிலையை சுற்றி நான்கு பக்கமும் இரும்பு கம்பிவேலி அமைத்து பாதுகாக்கப்பட வேண்டும்.

3. கம்பி தடுப்பு நல்லமுறையில் அழகுற அமைக்கப்பட வேண்டும். சிலை உள்ளே அடைப்பட்டது போல அமைக்கப்பட கூடாது.

4. சிலை அமைக்க குழு ஒன்று அமைக்க வேண்டும். சிலையை இக்குழுவினரே பராமரிப்பு செய்ய வேண்டும். பராமரிப்பு செலவினை அவர்களே ஏற்று சரி செய்து கொள்ள வேண்டும்.

5. போக்குவரத்துக்கு இடையூறு இல்லாத வண்ணம் சாலை மற்றும் பொது வழிகளிலிருந்து தகுந்த இடைவெளியுடன் சிலை அமைய வேண்டும்.

6. பொதுமக்களின் அன்றாட பணிகளுக்கு இடையூறு நேராத வண்ணம் சிலை அமைக்க வேண்டும்.

7. இச்சிலை அமைக்கப்படவுள்ள பகுதியில் நெடுஞ்சாலை பகுதியினை எதிர்காலத்தில் வேறு ஆக்கிரமிப்புகள் ஏதும் செய்யக்கூடாது.

8. இச்சிலை மேற்கூறிய நிபந்தனைகளுக்குட்பட்டு, தருமபுரி மாவட்டம், பென்னாகரம் வட்டம், மஞ்சநாய்க்கன அள்ளி ஊராட்சி, கடமடை

..3..

கிராமத்தில் ச.எண்.167/3, கிணறு புறம்போக்கில் கிராம நிர்வாக அலுவலர் கட்டடம் அருகில் தந்தை பெரியாரின் மார்பளவு வெண்கலச் சிலை குறிப்பிடப்பட்ட எல்லைக்குள் அமைய வேண்டும்.

(ஆளுநரின் ஆணைப்படி)

க. அஷோக் வர்தன் ஷெட்டி,
அரசு முதன்மைச் செயலாளர்.

பெறுநர்
ஆணையாளர்,
ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித்துறை,
சென்னை–15.
மாவட்ட ஆட்சித்தலைவர்,
தருமபுரி மாவட்டம்.
மாவட்ட காவல் கண்காணிப்பாளர்,
தருமபுரி மாவட்டம்.
நகல்
பொது (சட்டம் மற்றும் ஒழுங்கு) துறை, சென்னை–9.
முதலமைச்சர் அலுவலகம், சென்னை–9.
துணை முதலமைச்சரின் முதுநிலை நேர்முக
உதவியாளர், சென்னை–9.
இருப்புக் கோப்பு/உதிரி.

//ஆணைப்படி அனுப்பப்படுகிறது//

பிரிவு அலுவலர்